**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.134/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.7 |
| Name | : | திரு. அருள்ஜோதி சார்பதிவாளர் |
| Father's Name/Husband Name: | | திரு. சிவகுருநாத் |
| Village | : | கரூர் |
| Taluk | : | கரூர் |
| Age | : | 57/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 23.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் ஆஜர் இல்லை கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**சாட்சியானவர் கு.வி.மு.ச. பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்மந்தமாக போலிசார் எந்த தேதியில் எந்த இடத்தில் எத்தனை மணிக்கு என்னை விசாரித்தார்கள் என்றால் வாலிகண்டபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் பணியிலிருந்த போது, 25.07.2016 அன்று 2692/2009 ஆவண நகல் மற்றும் வில்லங்கச் சான்றிட்ட நகல் கடித வழி கேட்டார்கள். அதன்படி வில்லங்கச் சான்றும் மற்றும் ஆவணத்தின் உண்மை நகலை சான்றிட்டு வழங்கினேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் சம்மன் அனுப்பி விசாரணை செய்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்கண்ட ஆவணங்களை எடுத்து வர சொல்லி வழக்கு சம்மந்தமாக போலிசார் எனக்கு சம்மன் அனுப்பினார்களா என்றால் நினைவில்லை. போலிசார் நேரடியாக வந்து சான்றாவணங்களை கேட்டதால் நான் கொடுத்தேன் என்றால் கடிதம் வழி கேட்டதால் கொடுத்தேன். அந்த கடிதத்தின்படி வழக்கின் விவரங்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது முதல் விசாரணையில் நான் சாட்சியம் அளிக்கும்போது

அந்த கடிதத்தை பராமரிப்பு குறிப்பேட்டில் பதிவு செய்து அந்த குறிப்பேட்டை இவ்வழக்கில் சான்றாவணமாக தாக்கல் செய்து நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் பதிவு செய்யும் ஆவணங்கள் சரியாக இருந்தால் தான் நாங்கள் பதிவு செய்வோம் என்றால் அந்த நேரத்தில் நான் ஆவணம் பதியவில்லை வில்லங்கச்சான்று மற்றும் நகலை மட்டும் தான் கொடுத்தேன். ஆவண எண் 2692/2009 ஆவணத்தை பதிந்த முழு விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, அந்த காலத்தில் நான் பணியில் இல்லை. நான் எப்போது பணியில் சேர்ந்தேன் என்று எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எப்போது வாலிகண்டபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்தேன் என்றால் 18.07.2014. முறையாக மனு செய்த பின்பு தான் அரசு ஆவணங்களை கொடுக்க வேண்டும் என்றால் ஆமாம். போலிசார் கொடுத்த மனுவில் ஆவணங்கள் பெறுவதற்கான கட்டணம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக எவ்வித சம்மனும் பெறாமல் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த வழக்கு சம்மந்தமாக அரசு ஆவணங்களை கொடுத்து, சாட்சியம் அளிக்கிறேன் என்றால் போலிசார் விசாரணைக்கு வந்து கடிதம் வழி ஆவணங்களை கோரினால் அதை நாங்கள் கொடுப்போம். அவ்வாறு போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆவணங்களை கொடுக்க வேண்டும் என்று அரசாணை ஏதும் உள்ளதா என்றால் அரசாணை இருப்பது எனக்கு தெரியாது. வழக்கப்படி கொடுப்போம். வழக்கு சம்மந்தமாக சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள குறிப்பேடு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும், போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.